189

# அண்ணா யார்?



V21,21y1N09
N50

...ம் பதிப்பகம்

# அண்ணா யார்?

★

வழிப்போக்

OFFICE OF THE [illegible] OF BOOKS
15 NOV [illegible]
MADRAS

செல்வம் பதிப்பகம்,
11, வெங்கலக்கடை வீதி,
மதுரை.

முதல் பதிப்பு
செப்டம்பர் 1950.

Acc. No 820
Dt 26.11.77

**விலை எட்டணா.**

820

முத்து பிண்டர்ஸ், 7, ஜடாமுனி கோவில் தெரு, மது

# முன்னுரை.

அண்ணாவைச் சார்ந்த அறிஞர்கள் அவரைப்பற்றி அற்புதமான கட்டுரைகள் வரைய விரும்புகிறார்கள். ஆனால் எழுதுவதில்லை. பேச்சுக் கலைக்குப் புதிய இலக்கணம் வகுத்துத் தந்தார் அண்ணா! அதை மேடையேறி 'மைக்' அதிர முழக்க எண்ணுகிறார்கள் பலர். ஆனால் பேசுவதில்லை.

புகழ்ப் பாசுரங்களை விரும்பாதவர் அண்ணா! அதற்கு மாறாக எல்லோரும் அவரைப் புகழ்ந்து பண்பாடக் கருதுகின்றனர்—செய்வதில்லை.

அண்ணாவின் கட்டுரைகளெல்லாம் பேச்சாகவும், பேசுவதெல்லாம் புத்தகங்களாகவும் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது அவரைத் தரிசிக்க நினைப்பது கைகூடாத காரியம் ஆனால் எழுத்திலே அண்ணாவை எல்லோரும் காணலாம். அந்த முயற்சியில் ஒரு துளி இது!

எழுதுங்கள், எழுதுங்கள் என்று பெட்ரோமாக்ஸ் லைட்டுக்குப் பின் போடுவதுபோலச் சதா நேரமும் தூண்டிக் கொண்டேயிருந்த திருவாளர் 'எம்டனுக்கு' இந்நூல் உரித்தாகுக!

# பதிப்புரை.

செல்வம் பதிப்பகம்..............தளபதி பன்னீர் செல்வம் அவர்களின் நினைவாக நிறுவப்பட்டது!

பதிப்பகத்தாரின் முதல் முயற்சி இது! முயற்சி திருவினையாக்கும் என்பதில் முழு நம்பிக்கை உண்டு எங்களுக்கு!

அண்ணாவைப்பற்றி நாங்கள் அதிகம் கூறத் தேவையில்லை. காந்தம் இரும்பைக் கவரும். இது இயற்கை!

அண்ணாவின் பேச்சு, எழுத்து மக்களின் உள்ளத்தைக் கவருகிறது! இன்று இதுவும் இயற்கையாகி விட்டது!

அண்ணாவின் 'பேனா' வைக் கொண்டே அண்ணாவை அறிய முயலும் வழிப்போக்கனின் முயற்சிக்கு வரவேற்பு இருக்கும் என்று நம்புகிறோம்!

வழிப்போக்கனின் அரிய ஓவியங்களை அடுத்தடுத்து வெளியிடுவதே பதிப்பகத்தின் நோக்கம்!

**பதிப்பகத்தார்**

## அடக்கம்.


1. குடுமிகள் சங்கதி!
2. தங்கத் தாம்பாளம்!
3. நம் அந்தோனியா!
4. 6-6-1948!


# அண்ணா யார்?

## 1. குடுமிகள் சங்கதி!

யார் இந்த அண்ணாக்கள்?

நாக்கிலே நரம்பற்ற நரிக்குட்டிகள், நாவை வாணிபத்திற்கு அடகு வைத்த அறிவிலிகள், ரெக்ரூட் எழுத்தாளத் தியாகிகள் ஒருமையில் அல்ல, பன்மையில் பகருகிறார்கள், யார் இந்த அண்ணாக்கள் என்று.

இந்த 'அண்ணாக்கள்' என்ற அஃறிணைப் பாகுபாட்டில் நின்று கனைக்கும் அந்தக் கழுதைகளுக்குச் சரியான பாடம் கற்பிக்க எண்ணற்ற தம்பிகளை இன்று நாட்டிலே தோற்றுவித்த தூயமணி ஒருவர் திகழ்கிறாரென்றால் அவர் தான் அண்ணா!

அண்ணா! எவ்வளவு அழகிய சொல்! அன்பிலே வடித்தெடுத்த ஆனந்த ஓவியம்! இன்றையத் திராவிடரின் இன்பக் கனவு! இருதய கீதம்! ஓவிய உயிர்!

அண்ணா புராணம் இப்போது பாடுவது சில்லுப்போன பிளேட்டின் செயல் புரிவதற்குச் சமம். எல்லோரும் அட்டியின்றி ஏற்றுக்கொண்ட ஒப்பற்ற அறிஞர்! பகைவருக்கும் உவகை பாய்ச்சும் உவமைப் பாவலர்! சிந்தனைச் சிற்பி!

இருந்தாலும் அவர் ஒரேஒரு விஷயத்தில் மட்டும் இந்த உலகத்திற்கு முற்றிலும் மாறுபட்டுப் போகிறார். அவருடைய பேச்சு நயம், பெருமிதமான கலையார்வம் எல்லாம் நமக்குஒரு முரண்பாடான கருத்தையே தருகிறது. விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் அவரிடத்தில் சொல் வேறாகச் செயல் வேறாகப் பார்க்கவே முடியவில்லை.

அண்ணா செய்துள்ள இன்னொரு தவறு என்னவென்றால், நிறைய நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வேறு படித்திருக்கிறார். அது மட்டுமல்ல புத்தகங்களில் படித்தது மாதிரியே வாழ்க்கையிலும் நடந்து காட்டுகிறார். செய்யலாமா இது போல?

குதிரைப் பந்தயங்களைக் கூண்டோடு அல்லது கிண்டி ரேஸ் மைதானத்தோடு ஒழித்துவிட வேண்டும் என்று சட்ட சபைகளிலே தொப்பைராயன் பசப்புவார். ஆனால் சாயந்திரம் அவருடைய சலூன் பாடி செவர்லெட் கார் கிண்டியை நோக்கி ஜாலியாகப்பறந்து கொண்டிருக்கும். அவர் மனிதர்! நம்மைச் சேர்ந்தவர்!





சொல்லும் செயலும் ஒன்றாக இந்த உலகத்தில் இருக்கவே கூடாது. அப்படி எல்லா விஷயங்களிலும் இருக்க ஆரம்பித்துவிட்டால் அப்புறம் பொதுஜனங்கள் எல்லாக் கோயில்களையும் பள்ளிக்கூடங்களாக மாற்றிவிடுவார்கள். அநேக மாணவர்களுக்கு படிப்பதற்கு நிறைய வசதி ஏற்பட்டுவிடும். நாடு முன்னேறிவிடும்.

"ஆலமரத்தடிப் பிள்ளையார் தற்சமயம் கலியாணமாகாத ஆரணங்குகளைப் பார்த்துக் கொண்டு ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கிறார். இனிமேல் அவர் பள்ளியில் பாலபாடம் படிக்கவரும் பாலகர்களைத் தான் பார்க்கவேண்டி நேரிடும். அந்த டிராஜிடி (**Tragedy**)யை எம்முடைய பாரத் காவியந் ததும்பும் பாவி மனம் பொறுத்துக் கொண்டிருக்காது" என்று இட்லி முனையில் சாம்பார்த் தேவனை நோக்கி வைதீக அண்டாக்கள் கர்ஜிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வார்த்தை!

வைதிக நண்பர்களே! பொறுமையால் உண்மையை மறைத்துப் பேசும் 'பவர்' சோடாக்களே! அண்ணா மீது கோபித்துக் கொள்ளாதீர்கள். நாடு இன்று நன்றாக விழித்துக்கொண்டு விட்டது. நல்ல அறிஞரைப் போற்றுகிறது. நன்றாகப் புகழ்கிறது. அவரைக் காய்ந்து என்ன பயன்? இதெல்லாம் என்ன குடுமிச் சங்கதியா?

அப்படியிருந்தாலும் கத்தரிக்கோல் இலாக்காவுக்கு

ஒப்படைத்துவிட்டு ஜனங்கள் பேசாமல் ஒதுங்கிக் கொள்வார்கள். ஆனால் 'அவர்களுக்கு' இன்று மிஞ்சியிருப்பது, கட்டாந்தரையில் புல் முளைத்திருப்பது மாதிரி கட்டை விரல் உயரத்தில் காணப்படும் ஓரங்குலக் குடுமி! அதையாவது நன்றாக டாம்கோ ஹேர் ஆயில் பூசி முடித்துப் பூ வைத்துக் கொள்ளட்டும்.

காலம் தன்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. இதில் காய்ச்சலென்ன? புகைச்சலென்ன?

நான் நமது அண்ணாவை அதிர்ஷ்டவசமாக நாளைக்கு பேட்டி கண்டேன்.

என்ன திகைக்கிறீர்கள்? சௌராஷ்டிரர்கள் பேசும் தமிழ் போல என்னுடைய 'நாளைக்கு' நர்த்தனம் புரிவதைக் கண்டு தானே! தாராளமாகத் திகையுங்கள். நான் கூட முதலில் எனக்குப் பேட்டி காண அனுமதி கிடைத்ததும் அப்படித்தான் திகைத்தேன். அவரோடு பேசி மகிழ்ந்த சந்தோஷத்தால் 'நேற்று' என்பதை நாளைக்கு என்று உளறி விட்டேன்.

ஏன் நாளைக்குக் கூடப் பேட்டி கிடைக்கும். ஆனால் அண்ணாவைக் காண முடியாது. அவருடைய சுற்றுப்பிரயாண புரோகிராமைத்தான் பேட்டி காண முடியும். அப்போது அவர் எங்கேயாவது ஒரு பட்டியில் பணியாரம்—நாவுக் கதை சொல்லிக் கொண்டிருப்பார். பணியாரம்





அண்ணா தயாரித்துத் தருவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பரமசிவம் திராவிட வஜ்ஜிராயுதத்தைத் தாங்கிய வண்ணம் பவனி வந்து கொண்டிருப்பான்.

அண்ணா போகுமிடங்களிலெல்லாம் பேசுகிறார். அல்லது உடம்பெல்லாம் சாயத்தைப் பூசிக்கொண்டு கூத்தாடுகிறார். அதற்காக இப்படி மக்கள் ஒரு சாதாரணத்தை "அறிஞர்" என்று கொண்டாடுவதா?—இதுதான் இன்னும் சில சில்லறைகளின் மாஜிக் கூக்குரல்கள், சுருங்கி குலைந்த கர்ஜனைகள்!

என்ன இருந்தாலும் நம்ம வாயாடி எங்கே? ஹரி ஹர்ய ஹரயர் எங்கே? பாகவத அய்யரையும், பெரிய புராண அய்யங்காரையும் இப்படி நாட்டு மக்கள் புறக்கணிக்கலாமா?

இதுமட்டுமல்ல, அண்ணா பெரிய ஏமாற்றுக்காரர்!

படத்தில் அண்ணாவின் உருவத்தைப் பார்த்துவிட்டு நேரில் பார்க்க வேண்டுமென்று தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பவர்களை யெல்லாம் ஒரேயடியாய் ஏமாற்றி விடுகிறார். படத்தில் பார்க்கும் போது மாஜி திவானை சர். சி. பி. ராமஸ்வாமி அய்யரைப் போல அழகாக நீண்ட கோட்டுடன் காட்சியளித்துவிட்டு மேடையில் அழுக்கடைந்த தலை, உடை, வெத்திலைக் கறைபேறிய உதடு, இவைகளோடு தோன்றி ஜனங்களின் மனதையே மாற்றி விடுகிறார்.

கூட்டம் ஏராளம். சூழ நின்று தோழர்கள் மேடைக்குக் கூட்டிக் கொண்டு வருகிறார்கள். திடீரென்று அண்ணாவைக் காணோம். பலர் அண்ணாந்து பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பழைய ஞாபகம்!

ஆனால் ஜனங்களின் ஆரவார அலையோசையின் மூலம் அண்ணா மேடைமீது அமர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

இவ்வளவு எளிய முறையில் ஒரு பெரிய தலைவர் ஜனங்களோடு பழகுவதே தவறு. எட்டடி தூரத்தில் எட்டி நிற்கவேண்டும் நண்பர்கள். முடியுமானால் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு கையையும் கட்டிக் கொள்ளலாம். இருமருங்கும் பாராச் சேவகர்கள் போலப் பாட்ஜ் குத்தியிருக்கும் தொண்டர்கள் பராக்கு கூறச் சிங்கம் போலக் கம்பீரமாக மேடையில் ஏறவேண்டும். இரண்டு முறை நாற்புறமும் சுற்றிப் பார்த்துவிட்டு ஆரவாரிக்கும் ஜனங்களுக்கு நெஞ்சை நிமிர்த்திக் காட்சி தரவேண்டும். அப்புறம் ஆயிரக்கணக்கான ஜிந்தாபாத்துக்களுக்கு மத்தியில் இரண்டே நிமிடங்கள் இரத்தினச் சுருக்கமாகப் பேச வேண்டும். பேச்சின் இடையே அவ்வப்போது பலத்த அறைகூவல்கள், பயங்காட்டும் ஆலோசனைகள், திட்டங்கள் என்ற பேரால் நிறைய ஏற்படுத்திக் கொண்ட கட்டளைகள் இவைகளைத் தூவவேண்டும். இதுதான் ஒரு கட்சியை நடத்திச் செல்லும் 'வார்விக்'குகளிடம் காணக்கூடிய குணாதிசயங்கள்!





இவைகளுக்கு முற்றிலும் முரண்பட்டுப் போகிறார் நமது அண்ணா!

சரி போகட்டும். எல்லாம் சரிதான். இருந்திருந்து ஒரு பத்திரிகை ஆசிரியரைப் போய் அறிஞரென்று பகரலாமா? இவர்தானா எம். ஏ. படித்தவர்! நம்மளவாளைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? ஒரு எம். ஏ. அல்ல, டபுள் எம். ஏ. படித்துவிட்டு இன்று ஹோட்டலில் சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். காபி ஹோட்டலில் சப்ளை செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒரு காளிதாஸர்கள்! இரண்டு வராகமிகிரர்கள்! மூன்று பதஞ்சலிகள்! நான்கு வால்மீகிகள்!......என்று இன்னொரு பஞ்சாங்க முள்ளம் பன்றியார் பதறி உளறுகிறார்.

சார்! மிஸ்டர் பொதுஜனம்! நீங்களே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். என்ன முட்டாள்க் கூட்டமய்யா இவர்கள்! இப்படிப் "பொறாமையும் பொச்சரிப்பும்" எதற்கு ஒரு அறிஞர் மீது? எங்கோ செங்கல் பிரசாதம் பரிமாறிக் கொண்டு திரிந்த இதுகளுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்?

தன் பத்திரிகையைச் சரியாக நடத்த இன்னமும் தமிழர்களின் தாளுக்கடியில் வேட்டியைப் பரப்பி "பிச்சை" வேண்டி நிற்கும் இந்தப் பிராம்மகுலப் பீரங்கிகள் திடீரென்று விழித்துக் கொண்டு பிதற்றுகின்றன. இவ்வளவுக்கும் கதிர் அபிநயம் காட்டிவரும் கதைப்பிரம்மாக்களும், கவிதைப் பெருச்சாளிகளும், காவிய நந்திகளும், சிறுகதைச் சேவகர்

களும் அவர்கள் பக்கம். ராம பஜனையிலிருந்து சீதை காவியமுத்த இழவு புராணம் வரை இடைவிடாது எழுதிவருகிறார்கள்.

அம்பியைக் குழவி மிதிப்பதாகவும், குழவி ஆகாயத்தில் அந்தர் அடிப்பதாகவும் கதை எழுதிக் காசு பரிக்கிறார்கள், என்னையும் பார், எமது பத்திரிகையின் எண்ணிக்கையும் பார், என்ற ஜம்ப பேச்சுக்குப் புத்தாயிரவிக்க அதிகப் பக்கங்கள் வேறு போட்டு விடுகிறார்கள். இனிமேல் பேப்பர் வியாபாரம் செய்ய யாரேனும் ஒரு புத்தக வியாபாரி ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டாரென்றால், வாரத்தில் கோடிக்கணக்கில் கூடப் பத்திரிகைகளைப் பம்பரமாட விட்டு விடுவார்கள். என்னமானங்கெட்ட பிழைப்புகள் ஜனங்களை ஏமாற்றத் தெரிகிறது. இந்த லட்சணத்தில் இந்தச் சோதுசகளுக்கு சூரத்தனமான பேச்சுக்கு மட்டும் தலையும் கிடையாது, வட்டியும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களே! நன்றாகக் காதைத் திராவிட நாட்டுக் கல்லில் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். ஒரு எம். எல். ஏ. நம் அண்ணாவைக் குஸ்தி போடக் கூப்பிடுகிறார்!

இன்றுவரை தேர்தலுக்குத் தானே போட்டி போடக் கூப்பிடுகிறார்கள். குஸ்தி போட அல்லவே! எங்கே, எப்பொழுது என்று என் பதிலுக்காக எதிர் நோக்காதீர்கள். இனி ஒரு காலம் வரும். அப்போது தேர்தல் என்ற பெயரைக் கேட்கவும் அவர்கள் அஞ்சுவார்கள்! அடுத்த சவால்





குஸ்திக்குக் கையடிப்பதாகத் தானிருக்கும் என்பது என்னுடைய முடிவு. தேர்தல் நாமதாரி சர். காமராஜ் சர்மா அவர்கள் கூட இப்போது சாம்பார் வஸ்தாத், சங்கர சம்பந்தனாரிடம் சி(கி)ட்சை பெற்று வருவதாகக் கேள்வி. எதற்கும் நாம் தயாரிக்கக் கொள்ள வேண்டாமா? என்றே முன் கூட்டியே ஒரு வார்த்தை போட்டு விட்டேன்.

அண்ணாவைப் பார்த்தால் ஏன் இவ்வளவு கிலி! அவரை நேரிலே கண்டால் பியூன்கள் ஆபீசருக்கு அஷ்டகோணங்களில் வணக்கம் மரியாதை செலுத்துவது மாதிரி அடங்கி ஒடுங்கிப் போய் விடுகிறார்கள். அண்ணாவைப் பற்றி அசிங்கமாக எழுத பேனாவிற்குப் பேய்ப் பிரமை பிடித்துக் கொள்கிறது. ஆனால் சவால்கள், சவடால்கள், பட்டும் குறைந்தபாட்டைக் காணோம்.

“அண்ணா என்ன அழகாகப் பேசுகிறாரய்யா!” ஹூம்! ஒரு பெருமூச்சு! அந்தப் பெரு மூச்சை அப்படியே பிடித்து இழுத்துவந்து ஒரு ஜெயப்பிரமுன்னால் திமிர விட்டு, நான்கு பேர் சேர்ந்து பிடித்துக் கொண்டு பேசச் சொன்னால் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். ஹூம்! என்று பெருமூச்சு விடுவதைத்தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை!

இந்தக் குடுமிகள் சங்கதியே இப்படித் தான்!

Acc. No. 8
dt 26-11.77

# 2. தங்கத் தாம்பாளம்.

## அகராதி அண்ணா!

பௌதிகம், இரசாயனம், விஞ்ஞானம், சரித்திரம் எதற்கும் அண்ணா விளக்கங் கூறுகிறார். தமிழ் மொழியை எடுத்துக்கொண்டால் அவரே ஒரு அகராதி என்று கூடச் சொல்லலாம். அவர் தமிழிலுள்ள சொற்களைத் தவிர அநேக தமிழ் வார்த்தைகளைக் கூட உண்டு பண்ணியிருக்கிறார். காமராஜர் கைங்கரியம் செய்துவரும் கதர்நாயன்மார்கள் அத்தனை பேரையும் ஒன்றுதிரட்டி ஒரே வரியில் 'காமராஜர்கீஸ்' என்று கூறிவிடுவார்.

இந்தக் கலையில் அண்ணா ஆங்கிலநாட்டு அறிஞர் கார்லைலையும் ஒரு படி தாண்டிவிடுகிறார். கார்லைலுக்கு ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளிலுள்ள எழுத்துக்களும் போதாமல் சில சமயங்களில் நாய் குலைப்பதைப் போன்ற சத்தம் போடும் ஜெர்மன் வார்த்தைகளையும் எடுத்துக் கொள்வார். அண்ணாவின் கட்டுரைகளிலே 'கார்லைல் இன்பத்தை' நன்றாக ரசித்து மகிழலாம்.





விவரமாக, மிக மிக விளக்கமாக எழுதிக் கொண்டு வரும் வழியில் திடீரென்று வார்த்தைகளை முறித்துக்கொண்டு முற்றுப் புள்ளி வந்துவிடும். அந்த நேரம் நம் மூளைக்குச் சூடு ஏறிக்கொண்டு வரும். சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கும். பட்டுத் துணியால் கண்ணீரைத் துடைக்க முடியுமா? என்று கேட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்வார். பிறகு அடுத்த பாராவில் தான் தனது கருத்தை விளக்குவார்.

பட்டுத் துணி, கண்ணீர்-என்பன ஒன்று சேராத இரண்டு நிலைகள்! பட்டுத்துணி உலகில் நடக்கும் அக்கிரமங்களுக்கு பதிலாகவும், கண்ணீர் கொடுமையின் சின்னங்களாகவும் நம் கண் முன் துலங்கும். பணக் கொழுப்பு ஊறிய பார்த்திபர்களால், பாதியிரவுப் பத்தினிகளின் கண்வழியே புனல் போலப் பெருகிப் பாயும் கண்ணீரைச் சரியாகத் துடைக்க முடியாது. பட்டுத்துணி தொட்டால் துவளும். கண்ணீரும் துடைக்கப்படலாம். ஆனால் களங்கம்?

அந்த இரு வார்த்தைகளுக்கு நாம் இன்னும் எத்தனையோ வேஷங்கள் அணிவித்துப் பரவசம் பெறலாம். பட்டுத் துணியை ஒரு பண்டார சந்நிதியாக்கி, கண்ணீரைக் கற்பிழந்து கண்கலங்கி நிற்கும் ஒரு காரிகையாக்கியும் காணலாம். கற்பனைக்கு அடைக்குந்தாழ் அண்ணாவின்

கட்டுரைகளிலே கடுகளவும் காணமுடியாது. அறிவுக்கு அணைபோடும் வேலையை அவரிதயம்என்றுமே அறிந்ததில்லை.

அண்ணாவின் அடுக்குத் தொடர் அழகு நம்மை அப்படியே அவருக்காளாக்குகின்றது. அடுக்குத்தொடரோடு ஆழ்ந்த கருத்தும், அச்சமூட்டுமே ஆரம்ப வாசகர்களுக்கு என்ற பயமற்ற தன்மையோடு பல இடங்களில் பரிமாறப்பட்டிருக்கிறது.

வர்ணாஸ்ரமத்தில் ஒரு வனப்பு மிகும்வர்ணனை!

"அம்சதூளிகா மஞ்சத்திலே அமர்ந்திருக்கும் அரிவையை அடைய வேண்டி ஆங்குச் சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்திற்கோ அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், மங்கையை யாங்ஙனம் பெற முடியும்?...தாக்கிய வேலினைத் தாக்கி எறிந்து விட்டு, போர்க்குப் புகின் இது யார்க்கும் நேரல் முறை என்பதறிந்து புலியுடன் பொருதுங்கால் இனி யெனும் வலி கொளல் கூடாது என்பதுணர்ந்து, உயிர் கெடுவரை நெடுவரை போல் நின்று போரிட்டு வெற்றி காண்பர் வீரர்கள்!"

பெரிய புராணப் பல்பொடியால் பல் துலக்கி, கம்பராமாயணத்தைக் கொண்டு வாயலம்பி, வில்லிபுத்தூராரை விழுங்கிவிட்டு, நைடதத்தைக் கையில் தாங்கிய வண்ணம்





சன்மார்க்க சாலைக்கு எழுந்தருளும் கம்பக் கலாதரர்களால் ஒரு தொடர் இவ்வாறு, இதுவரை, இன்று, இனிமேல் உண்டாக்க முடியுமா? பிறகேன் அண்ணா என்றதும் அவர்கள் முகம் அன்று வாடும் செந்தாமரை போல் கருத்துவிடுகிறது?

தமிழைக் கற்று, தமிழையே பேசி, தமிழையே போதித்து உயிர்வாழும் பண்டிதர்களுக்குத் தெரியாது, தாங்கள் செய்து கொண்டிருப்பது தமிழுக்குத் துரோகம், தமிழருக்கு இழுக்கு, தமிழ் நாட்டுக்கு அவமானம் என்பது. கம்பனைக் காட்டி தன்மானனைத் தடியனைக்கும் துரோகம், பெரிய புராணம் பாடி மக்களைக் காட்டுமிராண்டிகளாக்கப் பார்க்கும் மதிமயக்கம்—இவைகளைச் சாடுகிறார் அண்ணா! சதிகாரர்களைச் சந்தியிலே நிறுத்துகிறார். அதற்குச் சலிப்புக்காட்டுகிறது, சீறிப் பாய்கிறது பண்டிதர் பட்டாளம்!

பண்டிதர்களே! பாமரனின் பாதத்தைப் பயப்படாமல் தாங்கித் திரிவதாகப் பகரும் பரமானந்தர்களே! தமிழால் வாழும் நீங்கள் தமிழுக்குச் சாதித்தது என்ன? என்ன பலன் கண்டார் தமிழர்! தோள் கண்டார் கும்பலில் இடிபடும் தோளே கண்டார். சுளை போகத் தோல் கண்டார் தோலே கண்டார். வேறு சுளை யார்கண்டார்? அதை எவர் உண்டார் கொல்? முத்தமிழுக்கு முள்வேலி கட்டி, தம்பிரான்களும் தாசர்களும் எம்பிரான் பேரைச் சொல்லி எத்துக்கள் செய்

தன்றி மக்கள் ஒலியாக முத்தமிழை முழங்கச் செய்ததுண்டா?

**எங்கே தமிழ்?** தர்ப்பைத் தலையணையில் பகவத் கீதையைப் பாயாக விரித்துப் படுத்துப் புரளும் பாவாணர்கள் கூறுவாரா பதில்? கூறமாட்டார். கூற முடியாது.

சென்றிருக்கும் வடவரையில் சேல்கண்ட தமிழ் பொருப்பிலேபிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே **தவழாத** தமிழ் இன்று எங்கே? இதோ அண்ணாவைப்பார்! **தமிழின் உயர்வை**, அதன் மேன்மையைத் தவறாது பாடுகிறது, அவரது கட்டுரைக் கதைக் காவியங்கள்!

**எது தமிழ்?** தண்டியலங்காரம் உதவாது புலவர்களே! தமிழைப் போற்றும் தகவு தகிக்கும் உங்கள் அகம் அண்ணாவைப் போற்ற அஞ்சுவானேன்?

## தளபதி அண்ணா!

கம்ப ராமாயணத்தைக்கொளுத்து என்று கட்டளையிட்டார், **தலைவர் பெரியார்** அன்று!

வைதிகப் பஞ்சு மூட்டையிலே கொள்ளிக் கட்டையை





வைத்தது போலிருந்தது அவரது கட்டளை! வேத விற்பன்னர்கள், ரிஷி கோத்திர பரம்பரைகள் மட்டுமல்ல, பார்ப்பனப் பாதந்தாங்கிகள் கூடத் துள்ளிக் குதித்தனர்.

பஜனைக் கூடத்துப் பாகவதக் குஞ்சுகள் நெஞ்சு பதறிப் பஞ்சை ஓலமிட்டனர். அடுக்குமா இந்த அக்கிரமம் என்று ஆரியபுரியினர் அலறினர். பண்டித மணிகள் கண்டனங்களை ஏவினர்.

தமிழ் போச்சே! தமிழ்நாடு போச்சே! தமிழர் நாகரீகம் போச்சே என்று தமிழுக்குத் தாங்கள் தான் என்று எண்ணிக் கொண்டிருந்த கோபுரத்துப் பொம்மைகளும், குப்பைக் காளான்களும் கொக்கரித்தனர்.

ஏன் கொளுத்த வேண்டும்? ஏன் எதற்காக?

நடுநிலை நின்ற நல்லறிவாளர்களின் உள்ளத்திலே எழுந்த வினா!

பெரியார் சொன்னார்:—

**“ஆரியரின் அடப்பந்தாங்கி கம்பன்! ஆரியத்துக்கு** அரண் செய்வது அவனது ராமாயணம்! தமிழர்களைத் **தாழ்த்தி விட்டது** அவன் **பாடிய** காவியம்!”. **திருப்தியடைந்தார்களில்லை, திருக்கம்பதாசர்கள்!** அம்மட்டோடு ஓய்ந்து

விடவுமில்லை. வாதுக்கும் வந்து விட்டனர், வம்பர்கள்! சல்லடம் கட்டினார்கள் சனாதனிகள்! கேலி, கிண்டல், அறிவுரை, வசவு, ஏக்கம், பெருமூச்சு, இயலாமை இன்னபிற எல்லாம் கேள்வி ரூபத்தில் வந்து குவிந்தன.

கம்பராமாயணப்போர் தொடங்கி விட்டது என்றே கூறலாம். ராமனைத் தொழுதவர்களுக்கும், இராவணனைப் போற்றியவர்களுக்கும் போர் ஆரம்பமாகியது! அடுக்குச் சொல் அண்ணா அப்போது **தளபதி** அண்ணா ஆனார்.

தமிழைப் பழித்த கனகவிசயனைக் கங்கைக் கரையிலேயே அடக்கிய சேரன் செங்குட்டுவனைப் போல கம்பராமாயணத்தைக் கேடயமாகக் கொண்டவர்களைக் கம்பனைக் கொண்டே சாடினார்! கம்பன்! கம்பன்! என்று மதுகுடித்த மந்தியைப் போல கூத்தாடிக் குரங்காட்டமாடியவர்களின் மூஞ்சியிலே கம்பரின் திருக்கரங்களைக் கொண்டே கரியைப் பூசினார்.

விருத்தமென்னும் ஒண்பாவிற்குயர் கம்பன் என்று வெண்பாப் பாடியவர்களுக்கு, கம்பனின் காவியரசத்தைக் காணீர் என்று கழறியவர்களுக்கு **கம்பரசத்தைப்** பிழிந்து அவர்கள் வாயில் ஊற்றினார்.





அப்போது தளபதியின் நடவடிக்கைகள் பிரமிக்கத் தக்கனவாய் இருந்தன! பாட்டுக்குப் பாட்டெடுத்தார்! பண்டிதர்கள் ஓட்டமெடுத்தனர். எதிர்ப்பாட்டுப் பாட எவருமே முன் வரவில்லை!

வீணர்களின் வாயை அடக்கியது மட்டுமல்ல, வெற்றியும்கண்டார் அண்ணா! கம்பராமாயணப் போரிலே அண்ணா அடைந்த வெற்றி, அவரது வெற்றி மட்டுமல்ல, பெரியாரின் வெற்றி, பெரியார் பெரும்படையின் வெற்றி!

வெற்றிக்குக் காரணமான அண்ணாவின் கட்டுரைகள் எதிரிகளின் ஈரலைத் தாக்கின. எதிரிகள் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கமாட்டார்கள், அவ்வளவு கனலைக் கக்குமென்று. குறு உருவம் என்று கொக்கரித்த கேலிகளின் குட்டைக் கலக்குவண்ணம் கொதிக்கும் எரிமலையானார். பூகம்பம் வெடித்தது போலிருந்தது அவரது சண்டமாருதச் சொற்பொழிவுகள்!

இராமாயணத்தில் கூட அனுமானின் வால் அசோக வனத்தை மட்டுமே அழிக்க முடிந்தது. அணுகுண்டால் ஹீரோஷிமா நாகசாகியை மட்டுமே நிர்மூலமாக்க முடிந்தது. ஆனால் அண்ணாவின் கட்டுரைகளோ பன்னெடுங்கால மாக மதமடுவில் ஊறிக்கிடந்த மக்களின் அறியாமையையே அழித்து விட்டது.

அண்ணாவின் கட்டுரைகள் அணுக்குண்டுகள்! வெறும் அடுக்குத் தொடர்கள் மட்டுமல்ல!

அண்ணாவின் கட்டுரைகள் வெறும் எழுத்துக் கோர்வைகள் அல்ல, ரஷிய கவச டாங்கிகள்! எதிரிகளைப் பொடியாக்கிப் புழுதியாக்கி விடும்!

அண்ணாவின் கட்டுரைகள் தென்றல் காற்று மட்டுமல்ல! எதிரிகளுக்குத் தீக்காற்று போலவுமாகும்!

இராமாயணம் என்ன சாமானியமா?

ஒரு தோழர் இப்படி ஒரு கேள்வி கேட்டார். அண்ணாவையே கேள்வி கேட்டுவிட்டோம், என்ற பெருமகிழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம் அந்த மட்டரகத்திற்கு!

இராமாயணத்தின் பரிமாண அளவுகளைப்பற்றிச் சந்தேகமா, அல்லது அண்ணாவின் அறிவைத்தான் எடைபோட்டுப்பார்க்கலாம் என்று கருதிற்றோ என்னமோ! ஆனால் அண்ணா அந்தச் சில்லரைக்கும் சரியான பதில் கொடுத்தார்!

நயமாக இருந்தால் சட்டென்று இராமாயணத்தை எடைபோட்டு, இரண்டு வீசை கனமிருக்கே, இது என்ன சாமானியமா என்று சவால் விட்டிருப்போம். ஆனால்





அண்ணா பதில் தரும் முறையே அலாதி! படிப்பவர்கள் மட்டுமல்ல, கேள்வி கேட்டவர் கூட விலா நோகச் சிரித்துவிட்டு வேறொருவர் பார்த்துவிடாதபடி தம் முகத்தை மூடிக் கொள்ளும் அளவுக்கு நகைச்சுவையைக் கலந்து தருவார்!

பக்தர் ஒருவர் தினசரி ராமாயணம் கேட்க பஜனைக் கூடத்துக்குச் செல்வதுண்டு. பாகவதரின் சுருதிகளை ரசிக்கத்தான் போனாரோ அல்லது சுண்டல் வாங்குவதற்கென்றே போனாரோ நமக்குத் தெரியாது. ஆனால் ராமபக்தி தினசரி ராமாயணம் கேட்க அவரை அழைத்து வந்தது. இன்னொரு பக்தர், கதை கேட்பதற்காகவே வருவார். உட்கார்ந்து பார்த்தால் பாகவதரின் முகம் கூடச் சரியாகத் தெரியவில்லை அவருக்கு! அவர் மிகவும் குட்டையானவர்! எனவே ராமபக்தரின் தோளிலே ஏறிக்கொண்டு சௌகரியமாகப் பார்த்தார். தினசரி இந்த நிகழ்ச்சி தவறாமல் நடந்து வந்தது. கடைசியில் பட்டாபிஷேகமும் முடிந்து விட்டது. அன்று இரவு வீட்டுக்கு போனபோது அடுத்த வீட்டுக்காரர் ராமபக்தரைப் பார்த்து, "இராமாயணம் எப்படி சார் இருக்கு" என்று கேட்டார். "இராமாயணம் என்ன சாமானியமா? அது கூட ஒரு ஆள் கனம் இருக்கே" என்றார் ராமபக்தர்! அடுத்த வீட்டுக்காரர் ராமபக்தரின் வீங்கிய தோளைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாராம். இராமாயணம் சாமானியமே அல்ல! ஏன்? அளவில் [illegible] என்பதாலா, பன்னீராயிரம் பாடல்கள் அதற்குண்டு என்கிற காரணத்தாலா? எந்தப் பெருமையினால் அது சாமானியமல்ல? பட்டப் பகலில், நடு ரோட்டில், நன்கு

பேர் மத்தியிலே நமது பாக்கெட்டில் இருக்கும் மணிபர்ஸைத் திருடிக்கொள்ளும் பிக்பாக்கெட்டினும் சாமானியமல்லவே!

இன்னும் சில குறும்பர்கள் தங்கள் களிமண் பகுதியிலிருந்து வெடித்துக் கிளம்பிய வினாக்களை வெளியிட்டனர். "ஏ சு. ம.! உனக்குக் கவி தெரியுமா? கவி?"—இப்படி ஒரு கேள்வி! சிங்கத்தைப் பார்த்துச் சிறு நரி சீறிற்றாம்! யானையைக் கண்டு ஈ இளித்ததாம்! கூழாங்கல், மலையைப் பார்த்துக் கை கொட்டி நகைத்ததாம்! இந்தக் காலி வீடு கேலி செய்கிறது அண்ணாவை! கேளீர் அந்தக் கேலியை! கவிதை என்றால் என்ன என்று தெரியாமல் இராமாயணத்தை எரிக்க வந்துவிட்டார்களே என்ற ஆத்திரமாயிருக்கலாம். ஒரு வேளை அண்ணா எம். ஏ. தானே படித்திருக்கிறார், எங்கே கவிதை படித்திருக்கப் போகிறார் என்று கருதியிருக்கலாம். கொல்லனிடம் போய் ஊசி என்றால் என்ன, அதைப்பற்றி உனக்குத் தெரியுமா என்று கேட்டால், அவன் தெரியாது என்றா சொல்லுவான்! "அப்பனே ஊசி என்றால் இதுதான்! நன்றாகப்பார்த்துக்கொள்" என்று கேட்டவன் உடம்பில் குத்திவிடமாட்டானா? கவிதையிலே பிறந்து, கவிதையிலே ஊறிப்போன அண்ணாவைப் பார்த்து கவி தெரியுமா உமக்கு என்று கயமைத்தன்மையின் காரணமாகக் காலாடித்தனமான கேள்வி கேட்டால், கேட்டவரின் அறிவு விலாசத்தைப்பற்றிச் சந்தேகப்படாமலா இருப்பார்? ஏதோ வெந்ததைத் தின்றதற்கு வேலை வேண்டுமே. என்பதற்காகக் கேள்வி கேட்டுவிட்டார்! பதில் வேண்டும்





இதோ அண்ணா தருகிறார்!

"அப்பனே! எத்தனையோ கவிதைகள் எனக்குத் தெரியும் ஆனாலும் உனக்கேற்ற கவிதையை நான் தராவிட்டால் உனக்குத் தூக்கம் வராது! இதோ கேள் கவிதையை! ஔவைப் பாட்டி பாடியது இது!

எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேல்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னாய் அது.

## எழுத்தாளர் அண்ணா!

உண்மையான உற்சாகத்தை உள்ளத்திலே வார்க்காத இலக்கியங்கள், கருத்தை மருட்டும் காவியங்கள் எதையும் நல்லறிஞர் இதயம் ஏற்காது. சகதியிலே கிடக்கும் சந்தனக் கலவை போல, வெண் மணலிலே பரப்பப்பட்ட வெண்ணெய்க்கட்டிகள் போல அத்தனையும் வீண்! கருத்திலே விஷம் பாய்ச்சும் காவியங்கள், இனத்தை இழிவுபடுத்தும் ஏடுகள், அஞ்ஞானத்தை வளர்க்கும் மெய்ஞ்ஞானங்கள் அத்தனையும் பாழ்! இழி தன்மை ஏற்றவைகள்! இந்த உண்மையை முற்றிலும் உணர்ந்த மக்கள் அண்ணாவைப் போற்றுவதில் ஆச்சரியமில்லை. நெறி பிறழாத நேர்மையாளர்கள் தவழ்ந்த பாதையிலே அண்ணாவின் அகம் தாராளமாய் நடமாடிச் செல்லுகிறது. செல்லும் வழியே அரிய உண்மை

களை, கருத்துக்கிசைந்த வாய்மைகளைக் கண்டறிந்தார். கண்டறிந்ததைக் கூறும் பண்பினார், நமக்குத் தரும் கருவூலங்கள், களிப்பைச் சிலருக்கும், கசப்பைப் பலருக்கும் ஊட்டலாம். ஆனால் அண்ணா பாதையை அவர்கள் பாதையாகக் கருதுவோர் மட்டுமே அவரைப் பூரணமாக உணர்ந்து கொள்ள முடியும்!

**பெரியார் வகுத்த பாதையே நமது கொள்கை** எனக் கருதிப் பணியாற்றிய அண்ணா, அரசியல்வாதி மட்டுமல்ல! சிறந்ததோர் சிறுகதைச் சிற்பி! அவரது சிறுகதைகளைப் படிப்பவர்கள் சிந்தனைச் சிகரங்களாக மாறிவிடுவார்கள். அவ்வளவும் கருத்துக்கள்! வெறும் கற்பனைகள் அல்ல! இன்று சிறுகதைகளைச் செதுக்கும் சிற்பிகள் சிற்பத்தின் தன்மையைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பதே இல்லை. பேனா என்னும் உளி கொண்டு சிலையின் காது இருக்கும் இடத்திலே கண்ணை வைத்து, மூக்கு இருக்க வேண்டிய பகுதியிலே காதுகளை வெட்டி, ஒரு காலை ஊனமாக்கி விகாரப்படுத்தி விடுகிறார்கள், பார்ப்பவர்கள் பிரமிக்கவேண்டும் என்ற காரணத்தால்!

சிக்கல்களை வேண்டுமென்றே சிருஷ்டித்து, போட்ட முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்துக் கொண்டே வர, கடைசியில் புதிய முடிச்சுகள் உருவாவதைக்கண்டு கத்தரிக்கோல் பிரயோகம் செய்து கதையாக்கி விடுகிறார்கள். அண்ணா அந்த ரகமல்ல! அவரது சிறுகதைகளில் சிக்கல் இருக்காது, த்ரில்ஸ் (Thrills) இருக்காது! சந்தேக விதை





களைத் தூவிவிட்டு, அடுத்த இதழில் முடியும் என்று சிறுகதைகளை அந்தரத்திலே விட்டுவிட்டுப்போகும் அரைகுறை எழுத்தாளர்கள் எழுதுவது போல அட்வென்ச்சர்கள் இருக்காது! ஆனால்......! உண்மையாயிருக்கும்! உயர்வு இருக்கும்! கற்பனையாயிருந்தாலும் நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கும் கருத்துக்கள் நிழலாடிக் கொண்டிருக்கும்! வேடிக்கை இருக்கும்! அதிலே வேதனை கலந்திருக்கும்! வீரமிருக்கும், அதிலே திராவிடரின் பண்பாடு விளையாடிக்கொண்டிருக்கும்! சிறு கதைகளின் போக்கிலே ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியவர் நமது அண்ணா!

பாட்டுடைத் தலைவனாக மன்னனும் மகேஸ்வரனும் இருந்து வந்த நிலையை மாற்றி, மன்னர் சாமியையும் மருந்தையையும் கவிதைகளுக்கு இழுத்து வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போல, சிறுகதைகள் என்றால் அதிலே நடமாடுபவர்கள் பெருங்குடி மக்கள் தான் என்ற நச்சு நிலையை மாற்றித் தெருக்கூட்டும் தில்லையம்மாளையும் கைவண்டிக்காரக் கந்தனையும் சிறு கதைகளிலே உலவவிட்டார் அண்ணா! கோடீஸ்வர் கோகிலங்களைப்பற்றி அவர் எழுதவில்லை! குமஸ்தாவின் பெண்ணைப்பற்றி எழுதினார்!

சிறுகதைக் கட்டுக் கோப்பிலே காதல் பிரதானமானது! சிறுகதைப் பிரம்மாக்கள் என்று தங்களைத் தம்பட்டமடித்துக்கொண்டு திரியும் சில்லறைகள் காதலை செல்வந்தர்களுக்கு, மட்டும் உரிமையாக்கினார்கள். வீடு பெருக்கும் வேலம்மாளுக்கு காதல் உணர்ச்சி இராதென்று கருதினார்கள்! மாடு

மேய்க்கும் மருதைக்கு காதல் வராது என்று நம்பிவிட்டார்கள்! மூட்டை சுமக்கும் முத்தன், ஆலைத் தொழிலாளி ஆறுமுகம், சித்து வேலை செய்யும் முத்தம்மா இவர்களையெல்லாம் மறந்துவிட்டனர். இல்லை, மறைத்து விட்டனர்! ஆனால் அண்ணா தம் சிறு கதைகளிலே அத்தனை பேரையும் இழுத்துக்கொண்டு வந்தார்!

கடையில் வேலை பார்க்கும் கண்ணுச்சாமிக்கு முதலாளிச் செட்டியாரின் குமாரி கல்யாணி மீது காதல் உண்டாகியது! அவன் காதலைக் கல்யாணி வேம்பு என்று வெறுத்து விடவில்லை. கற்கண்டைப்போல் சுவைத்தாள்! **இது 1938-40 வசீகர வரலாற்றிலே** அண்ணா காட்டும் படம்!

காதல்-ஏழை எளியவர்களுக்கு மட்டுமல்ல! கணவனை இழந்த காரிகைகளுக்கும் உண்டு என்று தம் சிறு கதைகளிலே காட்டினார்! துணிச்சலோடு! பாடாத தேனீக்கள், பசியாத நல் வயிறு பார்த்ததுண்டா என்று புரட்சிக் கவிஞர் அறைகூவினார்! "இல்லை" என்று அண்ணாவின் பேனா எழுதியது!

வேரில் பழுத்த பலா கோரிக்கையற்றுக் கிடக்கலாமா? நாடப்படாத நறுங்கனிகளா? சூடப்படாத மகுடங்களா? தேன் குடத்தை தெருவில் போட்டு உடைப்பதா? சமுதாயம் அந்தச் சந்தனக் கலவையைச் சாக்கடையில் தள்ளியது! ஒப்பற்ற மாணிக்கத்தைக் குப்பையில் எறிந்தது! கறையொன்றில்லாச் சித்திரத்தைக் கறைப்படுத்தியது!





அண்ணா தம் சிறு கதைகளிலே இதனைக் கண்டித்தார்! அவரது கதைகளில்வரும் பெண்கள் வைதவ்யத்தை எண்ணி வருந்திக் கொண்டிருக்கும் கோழைகளல்ல! துன்பத்தைத் துச்சமெனக் கருதித் துணிவு கொண்ட தூயமணிகள்! சமுதாயத்தை எதிர்த்து வெற்றி கண்ட வீரமணிகள்!

கல்யாணி கடைக்காரச் சிப்பந்தி கண்ணுச்சாமியோடு ஓடிவிட்டாள்! ஆனால் அவர்கள் வாழ்வு கண்ணீராக அமையவில்லை! களிப்பு மிகுந்த வசீகர வாழ்வாகவே இருந்தது! "சுகப்பிரசவம்! தாயும் சேயும் நலம்!" என்றுதான் லேடி டாக்டரின் டைரியும் சொல்லுகிறது!

புரோகித குமாரி லலிதா சீர்திருத்தச் செம்மலுடன் பெங்களூர் சென்று குடியேறினாள்! **புரோகிதர் புலம்பல்** அவர்களைச் சுட்டுசாம்பலாக்கி விடவில்லை! மாறாக **வாலிபர் விருந்து** அவர்கள் வாட்டத்தைப் பொசுக்கியது. பேரனைப் பார்க்க ஆண்டு தோறும் புரோகிதர்தான் பெங்களூர் சென்று வருகிறார்!

அண்ணாவின் சிறுகதைகள் அத்தனையும் வாழ்க்கையின் சாதாரண அடிப்படைகளை வைத்துக் கட்டப்பட்டவை! கதைகளிலே காட்சியளிக்கும் பாத்திரங்கள் கருத்துக்கு உயிரூட்டும் ஓவியங்கள்! ஒரு சில கற்பனையாயிருக்கலாம். ஆனால் சம்பவங்கள் நம்மை ஏமாற்ற முடியாது. காமராவுக்குத் தப்பிய காட்சிகள் அவரது கண்களுக்குத் தப்ப முடியவில்லை! **செல்லப் பிள்ளை** யின்-லீலா விநோதங்கள், **செல்**

**வாழை**க்காக ஏழைபடும்பாடு, **மாடி வீடு** தரும் மகிமை, **ஜெபமாலை**யின் கேலி, இவைகள் நமக்குத் தருவது **சிந்தனை விருந்து!** வாழ்க்கைப் புயலிலே 'சூதாடி'களையும் நாடோடிகளையும் அறிமுகப்படுத்துகிறார்! அதுமட்டுமல்ல! 'கள்ள'னையும் 'கைதி'யையும் கூடப் பார்க்கிறோம்! ஏய்த்துப் பிழைப்பவன் வெளியிலே, ஏமாந்தவன் சிறையிலே! என்ற உண்மையை **வாழ்க்கைப் புயல்** உணர்த்துகிறது.

சமூகக்கதைகள் மட்டுமல்ல, சரித்திரக் கதைகளும் அண்ணா தீட்டியிருக்கிறார். அவரது சரித்திரக் கதைகளின் பின்னணி, சரித்திர ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு மறைத்து வைத்த அரிய பெரிய உண்மைகளைக் கொண்டதாயிருக்கும்! சிவாஜியின் சாம்ராஜ்யம் சரிந்து போனதற்குக் காரணம்—சரித்திர தேவதைகள் மறைத்துவிட்ட மர்மம்—**சந்திரமோகனில்** தருகிறார்! பரந்து கிடந்த ரோம் நாடு மறைந்து விட்டதற்கு அந்நாட்டு வீரர்கள் கோழைகளாய்ப் போனதல்ல காரணம்! ராணிகளின் லீலா விநோதம் தான் என்பதை **ரோமாபுரி ராணிகள்** கூறுகிறது! புலிகேசியைப் போரில் வென்று அவன் தலைநகராம் வாதாபியைத் கனலுக்கிரையாக்கி வெற்றிக்கொடி நாட்டிய மாவீரன் மகேந்திர வர்மனின் பல்லவ ராஜ்யம் பொடியாகிப் போனது—காரணம்

## பிடி சாம்பல்!

**அண்ணா கலிங்கராணி பாடியுள்ளார்!** கலிங்கராணி அவருடைய கதைகளுக்கெல்லாம், காவியங்களுக்கெல்லாம் ஒரு எவரெஸ்ட்! இலக்கியங்களிலே கலிங்கராணிக்கு தங்கக் கிரீடம் உண்டு! அண்ணாவின் சிருஷ்டியிலே அழியாத புகழைப் பெற்றது கலிங்கராணி. மனிதனின் அபிலாஷைகள் என்னென்ன உண்டோ, அத்தனையும் வருகின்றன கலிங்கராணியில்!





பேராசை, சூழ்ச்சி, வஞ்சகம், மூடபக்தி, காதல், காமம், சோகம், சோபிதம், வீரம் விவேகம், கிளர்ச்சி, சாகஸம், உணர்ச்சிப்பெருக்கு, உள்ளத்திலே நிழலாடும் எண்ணக் கோர்வைகள்—அத்தனைக்கும் இடமளித்திருக்கிறார், அண்ணா, கலிங்கராணியில்! ஆரம்ப அத்தியாயத்தின் தலைப்பே 'கலிங்கத்துப் பரணி'யைக் காட்டுவது போலிருக்கும். முதல் தலைப்பு "கணைகள், காட்டிலல்ல!" என்று வருகிறது.

நடனாவும் வீரமணியும், பொன்முடி—பூங்கோதை, லைலா—மஜ்னு, ரோமியோ—ஜூலியட்டைப் போல! ஆனால் மூர்க்கத்தனத்திற்கும் மூடத்தனத்திற்கும் இடையிலே சிக்கிச் சீரழிந்தது பொன்முடி—பூங்கோதையின் காதல்! லைலா—மஜ்னுவின் பிணங்கள் தான் ஒன்றுபட்டன பாலைவனத்தில்! சந்தர்ப்பம் செய்த சதி ரோமியோ ஜூலியட்டின் சவங்களைக் கல்லறையில் சந்திக்கச் செய்துவிட்டது!

கலிங்கராணியில் அப்படியல்ல! அங்கு மூடத்தனம் முறியடிக்கப்படுகிறது. தற்பெருமை, மூர்க்கத்தனம், பிடிவாதம் தகர்க்கப்படுகிறது. எனவே நடனாவும் வீரமணியும்

ஒன்றுபடுகின்றனர்! இடையிலே நடனாவைக் காதலிக்கும் கிழட்டு வைத்தியரையும், வீரமணியை விரும்பும் காட்டுக் கிழவியையும் நாம் மறந்துவிட முடியாது. மனிதனை மகேஸ்வரன் என்று நம்பிக்கிடக்கும் மலர்புரி அரசி மருதம், சூழ்ச்சிக்காரி மங்கா, இளவரசி அம்மங்கை—இன்னும் சாகும் போதும் வீரச் சிரிப்புச் சிரிக்கும் கலிங்கத்துக் கிழவன், ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் ஆரியக் கொக்கு பதஞ்சலி இவர்களெல்லாம் நம் நெஞ்சை விட்டு நீங்காத சித்திரங்கள்!

கலிங்க ராணியில் அவர் காட்சிகளைச் சித்தரித்துக் காட்டும் திறனானது ஹாலிவுட் போட்டோ கிராபரின் கைத்திறமையை விடச் சிறந்து விளங்குகிறது. வேலோடு வேல்! யானையோடு யானை! தேரோடு தேர் பொருதும் கலிங்கத்துப் போர்க்களக் காட்சி மிகவும் பயங்கரமானது! காட்டிலே வணிகர் கூட்டம் கொள்ளையடிக்கப்படும் காட்சி மகா அற்புதமானது! மலர்புரியில் நடக்கும் புரட்சி நம் மனதை விட்டு அகலவே அகலாது!

கலிங்கராணிக்குப் பிறகு அண்ணா எத்தனையோ பெருங்கதைகள் தீட்டிவிட்டார்—பார்வதி **B. A**, ரெங்கோன் ராதா—தசாவதாரம்—என் வாழ்வு. ஆனால் எல்லாம் கலிங்க ராணிக்கு அடுத்த ரகம் தான்!

இலக்கியச் சந்தையிலே அண்ணாவுக்கு தனியிடம் உண்டு! இலக்கிய மாளிகையைத் தாங்கள் தான் தாங்கு





கிறோம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எழுத்தாளத் தூண்கள் அன்று அண்ணாவை இருட்டடிப்புச் செய்தன! முதல் எழுத்தாளர் மாநாட்டுக்கு அண்ணா அழைக்கப்படவில்லை!

## கவிஞர் அண்ணா!

எழுத்துப் புலவராகத் திகழும் அண்ணா சிறந்ததோர் கவிஞர்! அண்ணா ஒரு கவிஞரா? என்ன பாடினார் அண்ணா? எதைப் பாடினார் அண்ணா? எத்தனை காவியம் இயற்றியிருக்கிறார்? மோனை குறையாமல் சீர் குலையாமல் யாப்பு புனைவாரா? அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தப் பாப்புனைய வல்லவரா? என்றெல்லாம் புலவர் கூட்டம் வெளியே கேட்கத் தைரியமில்லாவிட்டாலும் கேள்விகளை உள்ளத்திலேயே வைத்துப் பொசுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தாயமணி, "சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே" என்று பாடினதற்கே எக்காளமிட்ட பண்டிதப் பெருச்சாளிகள் அண்ணாவைக் கவிஞரென்று சொல்லி விட்டால் கால்கடுக்க குதிக்கமாட்டார்களா? பண்டிதர்கள் ஆடட்டும்! புலவர்கள் மனம் புழுங்கட்டும்! இலக்கணப் புலிகள் பிலாக்கணம் பாடட்டும்! அண்ணா கவிஞரே தான்! ஆம் அண்ணா ஒப்பற்ற கவிஞர்!

எதுகை மோனை எலும்புகளைச் சீர் தொடை என்ற உளியால் உடைத்து ஒழுங்குபடுத்தி எழுத்துக் கோர்க்கும் சோனாசிக் கவிஞரல்ல அவர்! வீட்டுப் பிள்ளைக் கையில்

வைத்துக் கொண்டு, வெறுஞ் செங்கல்லை வைத்து அடுக்கிக் கொண்டு போகும் கட்டிட மேஸ்திரிக் கவிஞரல்ல! இலக்கணம் கோபித்துக் கொள்ளுமே என்பதற்காக, வார்த்தைகளை அளபெடைச் சம்மட்டியால் அடித்து நெளித்துவிடும் போலிக் கவிஞரல்ல!

ஆனால்............அண்ணா! அவர் ஒரு கவிஞரே தான்! அவர் கட்டுரை என்று எழுதிக் குவித்தவைகள் தான் கவிதைகளாகத் திகழ்கின்றன! அவர் கதை என்று எழுதிக் காட்டியவைகள் தான் இன்று காவியங்களாகக் காட்சியளிக்கின்றன!

இன்று கவிஞர்கள் என்று தம்பட்டமடித்துக் கொண்டு எதுகையில் இடறி, மோனையில் முட்டிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் அண்ணாவின் சொல்லோவியங்களிலே துள்ளி விளையாடும் உவமைகளின் உயர்வைக் கண்டான பிறகு, உள்ளத்திலே பொச்சரிப்பும், உதட்டிலே பொன் சிரிப்புமாகக் காட்டுகிறார்கள்!

கதை கட்டுரைகளில் மட்டுமல்ல, உரையாடல்களில் கூட உவமைகள் பெருகிப் பாயும்! உண்மைகள் நம் உள்ளத்தில் தோயும்! அவரது உவமைகளில் எளிமை மட்டுமல்ல, இனிமை கூடத் ததும்பும்! காதல், வீரம், சோகம் முதலிய ஒன்பது சுவைகளையும் ஒன்று திரட்டித் தருகின்றன, அவரது உவமைகள்! காந்தா வாசலுக்கு வருகிறாள்! எதிர் வீட்டிலே, சோமு என்ற அந்தச் சுந்தரமான வாலிபன் நின்று





கொண்டிருக்கிறான். மழை பெய்வதற்கு முன்பு வானத்தில் மின்னல் மின்னி மறைவதைப் போல, அவள் உள்ளத்திலே காதல் ஒளி பளிச்சென மின்னுகிறது! ஆனால் மின்னலைப் போல அந்த ஒளி மறைந்து விடவில்லை! இதைப்பற்றி அண்ணா காந்தாவையே சொல்லச் செய்கிறார் கவனியுங்கள்!

“யார் அந்தப் பிள்ளை என்று எட்டிப் பார்த்தேன்! அவன் என்ன செய்தான் தெரியுமா? ஒரே தாவாகத் தாவி என் உள்ளத்தில் உட்கார்ந்து கொண்டான்! அந்த உருவம் எதிர் வீட்டு வாசற்படியில் தான் இருந்தது! ஆனால் சித்திரம் என் நெஞ்சில் பதிந்து விட்டது!”

காந்தா ஏழைப் பெண்! ஆனால் அவள் காதல் விலையுயர்ந்த மாணிக்கம்! ஆயினும் கல்யாணம் அவளைக் கிழவனிடம் சேர்த்து விடுகிறது! இளமை ததும்ப, எழில் ததும்ப, கண்ணீர் ததும்ப காந்தா கூறுகிறாள். “உப்பில்லாத பண்டம் தான்! எந்தக் குப்பையில் கிடந்தாலென்ன?” பழமொழிக்குப் புதுமெருகு ஏற்றிக் காட்டுகிறார், அண்ணா! காந்தாவுக்கும் கிழவனுக்கும் கல்யாணம் நடக்கிறது, அந்த கண்றாவிக் காட்சியை படம் பிடித்துக்காட்டும் அற்புதத்தையும் பாருங்கள்!

“கண்டவர்கள் மயங்கும்படியான அழகு இருந்தது எனக்கு! கழுதையாட்டம் வயசாச்சு, கலியாணம் ஏன் இன்னும் செய்யவில்லை என்று கேட்க ஊரிலே வேலை வெட்டி ஒன்றுமில்லாத ‘நாலு பேர்’ தயாராக இருந்தனர். பணத்தைக் கொடு

த்தால் எந்தப் பொருத்தமும் பார்த்துச் சொல்லப் புரோகிதர்கள் இருந்தனர்! உலகத்திலே எதுதான் இல்லை! பளபளப்பான தோலைப் போர்த்திக்கொண்டு பாம்பு இல்லையா?"

கவிதைக்கு இன்றியமையாத மூல உயிரோட்டத்தை அண்ணாவின் எழுத்துக்களிலே எவரும் காணலாம். "நமது நாட்டிலே ஒரு இப்ஸன் இருக்கிறார்! பெர்னாட்ஷா இங்கிலாந்தில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் இருக்கிறார்" என்று அண்ணாவைப் பற்றிக் 'கல்கி' போற்றித் துதிபாடும்போது கனபாடிக் கூட்டமே கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கை தட்டியது! கல்கி நாயனார்கள் மிரள மிரள விழித்தார்கள்! ஆனால் அடுக்குத் தொடர் மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வரும் ஆழ்ந்த கருத்துக்களைக்கண்டு பெருந்தலைகள் பெருமூச்சு விட்டன! சின்னப் புத்திகள் சீறின!

கரியைக் கறையான் அரித்துவிட முடியுமா? செந்நாய்க் கூட்டம் சிங்கத்தை என்ன செய்ய முடியும்? ஊதல் காற்று மலையை உருட்டிவிடப் போகிறது? அண்ணா ஒரு இமய மலை! அங்கிருந்து ஊறி வரும் கருத்துக்கள் கங்கையெனப் பெருக்கெடுத்து ஓடி வருகின்றன! தார்மீக மணல் மூட்டைகளால் அந்த வெள்ளத்தைத் தடுத்துவிட முடியாது. பார்ப்பனீயப் பனிக்கட்டிகள் அந்தப் பாதையை அடைத்துவிட முடியாது! அது வற்றாத ஜீவநதி!

அண்ணா பாதனாக, வீரனாக, ஒற்றனாக, சௌமியனாக, துரையாக இருந்துகொண்டு அளித்திருக்கும் உயிரோவியங்கள் கணக்கிலடங்காது! அண்ணா ஒரு தங்கத் தாம்பாளம். அதிலே முத்துக்களும், மோகராக்களும், வைரங்களும், வைடூரியங்களும் நிறைந்து கிடப்பதை இன்று நாம் காண்கிறோம் களிப்படைகிறோம்.



# 3. நம் அந்தோனியார்!

அண்ணா பேசுகிறார் என்றால் கேள்விக் குறிகள் ஆச்சரியக் குறிகளாக மாறிவரும் நேரம்! என்ன பேசுகிறார் என்று கேட்கவும், பேசுவது எப்படி என்று தெரிந்து மகிழவும் பல உடையினர் கூடுவர். அண்ணா ஒரு ஊரில் பேசப் போகிறாரென்றால் அந்த வட்டாரத்தில் ஒரே புழுக்கமும் புகைச்சலுமாக இருக்கும். இந்நிலை முன்பு! வயோதிகர்கள் அண்ணாவின் சொற்பொழிவுகளில் நடைமுறை அனுபவங்கள் நடமாடுவது கண்டு சிலாகிக்கின்றனர். வாலிபர்கள் உணர்ச்சியின் சின்னங்களாக உருவங்களாக மாறிவிடுகின்றனர். மாணவத் தோழர்களின் மனம் அண்ணாவுக்குப் புதுப் புது ஆடைகளை அணிவித்துப் பரவசம் பெறுகிறது.

மாஜினியைச் சரித்திரத்திற் கண்ட தோழர் அண்ணாவை மாஜினி ஏறிவந்த குதிரைமீது ஏற்றி வைத்து அழகு [illegible] இலக்கிய ரசிகர் அண்ணாவின் நெற்றி [illegible] யின் நெற்றியோடு ஒப்பிட்டுக் களிக்கிறார். தமிழ் மொழியின் மீது தணியாத ஆர்வம் கொண்ட தன்மானத் தமிழருக்கு காளமேகமும் கவிக்குலச் சிங்கம் புகழேந்தியும் அந்நாள் அண்ணாக்களாகக் காட்சியளிக்கின்றார்

கள். சேரன் செங்குட்டுவன் மேடையேறிப் பேசினால் எப்படியிருப்பாரோ அப்படித்தான் அண்ணா இருக்கிறார் என்று ஆனந்த நிலையில் இன்னொருவர் அண்ணாவைக் கண்டு ரசிப்பார்.

இவ்வளவுக்கும் அவர் சாதாரணமானவர். தன் பெயருக்குப் பின் எம். ஏ. என்று போட்டுக்கொள்ளவும் விரும்பாதவர்! படித்ததின் பயனை, ஆராய்ச்சிகளின் விளைவை, அன்னக் காவடிகளிடம்கூறி அவர்களைத் தயார் செய்யும் பணியிலிருப்பவர். ஆனால் அவர் பேசும்போது மின்சார சக்தி பாய்ச்சப் பெற்ற இரும்புத் துண்டு போல எல்லோருடைய மனத்தையும் இழுத்துக் கொள்கிறார்! அண்ணா பேசுவது சிலருக்கு ஆச்சரியத்தையும், இன்னும் மிக மிகச் சிலருக்கு ஐயத்தையும் ஊட்டி வருகிறது. புரட்சிகரமான வார்த்தைகளைக் கடல் மடை திறந்தாற் போலக் கொட்டும்போது உண்மையிலேயே சர்க்காரும் சர்க்காரைச் சார்ந்தோரும் கண்கலங்கிக் கவலை ததும்பி நிற்கின்றனர். அண்ணா விரும்பினால் அடக்க முடியாத புரட்சி இயக்கத்தை நிர்மாணித்து விடமுடியும். ஆனால் அமைதியின் வழி வந்த அண்ணாவின் அகமோ, சாந்தம், சமரசம், சமாதானம், இந்த வழிகளிலே உண்மைச் சமுதாய விடுதலை காணத் துடித்து நிற்கிறது!

மக்கள் சூழ் நிலையின் முக்கியத்துவத்தைப் பூரணமாக உணர்ந்தால், அவர்கள் முழு மனதுடன் எதுவரினும் ஏற்போம் என்ற எண்ணத்தோடு, புரட்சி செய்தால் தான் வாழ்





வுண்டு என்று புரிந்து கொண்டால்—யாருக்காக அறப்போர், யார் மீது என்ற தெளிவு அடைய வழி ஏற்படும். கொழுந்தளிக்கும் ஆரவார அலையோசை மத்தியிலே தளபதியின் வீர உரை இது!

“............இந்நிலை இந்தியாவில் இன்னும் நீடித்தால், இந்தியா செஞ்சீனாவாக மாறும். நேரு சியாங்காவார். அந்தமான் பார்மோஸவாகி விடும். இந்தக் கூட்டத்திலே குழுமியுள்ளோர் மத்தியிலே யாரேனும் ஒரு சாதாரணத் தோழர் ஒரு மாசேதுங்காகக் காட்சியளிப்பார். எண்ணற்ற மாசேதுங்குகள், சூடேக்கள் கிளம்புவர், நிலையறிந்தால்! மக்கள் நினைத்தால் நானே கூட ஒரு மாசேதுங்காக மாறிவிடலாம்!”

புரட்சி செய்யும்படி மக்களைத் தூண்டுவது சுலபம். புரியாத மக்கள் போர்த்தீயில் குதித்தான பிறகு புலம்பலும் புகைச்சலும் கிளம்பினால் இலட்சிய சித்தியில் வெற்றி காண வழியில்லாமல் போய் விடலாம். எல்லாம் விழலுக் கிறைத்த நீராக, பாறையில் வடித்த பறையாகமாறிவிடும். ஆகவே மக்களை எப்படித் தயார் செய்வது என்ற பணியில் அண்ணா ஈடுபட்டுள்ளார்!

அட்லாஸ் என்றால் கெஜம் என்ன விலை என்று கேட்கும் மக்களுக்கு, பஞ்சாங்கத்தின் பாரம்பரைப் பக்தர்களுக்கு நில நூல் வர்ணனைகளை மனக்கண் முன் துலங்கும்படி மேடை

யில் விவரித்துக் கூறி உணர்த்துகிறார். சொற்பொழிவுகள் தமிழ் மொழியில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் கூட. ஆங்கில அறிஞர்கள் அதிசயித்துப் புகழும்வண்ணம் அற்புதமாக நிகழ்த்தியிருக்கின்றார்.

நாகட்லாவிலே, இங்கு திராவிடப் பெரியார் ராமசாமி விளங்குவது போல ஆந்திரநாட்டுப் பெரியாராக, ராமசாமி சௌத்ரி என்பவர் இருந்து வந்தார். இரு ராமசாமிகளுக்கும், ஓரளவு தொடர்பு உண்டு. இருவரும் கடவுளின் விரோதிகள் எனக் கருதப்பட்டவர்கள்! பத்தாம் பசலிப் பார்ப்பனர் தம் பயங்கர விரோதிகள்! புழுத்த புராணங்களைப் பொசுக்க வந்த தீப்படைகள்! புல்லர்களைக் கருவறுக்கப் புதிர்போடும் போர் முரசங்கள்! புரட்சிப் புயல்கள்! நாப்பறையாளர்கள் காணவும் நடுங்கும் ஏற்பாடுகள்! அத்தகைய ராமசாமி சௌத்ரி மரணமடைந்து விட்டார். அவர் ஞாபகார்த்தமாக நடந்த ஒரு விழாவிலே கலந்து கொள்ள பெரியாரும், அண்ணாவும் சென்றனர்.

தீச்சட்டியில் போட்டு வாட்டுவது போலிருந்தது வழிப் பயணம்! நாகட்லாவில் அண்ணா ஆங்கிலத்தில் பேச, தோழர் ஜனார்த்தனம் அதைத் தெலுங்கிலே மொழி பெயர்த்தார். நாகட்லாவுக்கும் நமக்கும் சுலபத்தில் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருந்தும் தவறிவிட்ட நிலைக்காக, ஆங்கிலத்தான் இல்லாத குறைக்காக அண்ணா அப்போது பெருமூச்செறிந்தார். நாட்டின் மூலை முடுக்குகளிலே, திரா





விட வட்டாரங்களிலே, தெலுங்கர் வாழும் ஆந்திர தேசத்திலே பகுத்தறிவுக் கருத்துக்கள் பரவுவது கண்டு புன்னகை பூத்தார். அந்தப் 'புன்னகையும் பெருமூச்சும்' ஒன்று சேர்ந்து அன்று ஒரு உருக்கமான ஆங்கில சொற்பொழிவை நமக்குத் தந்திருக்கிறது. அடுத்து, "மக்களின் கவிஞன்" **(People's Poet)** என்ற தொடர்த் தலைப்பிலே கவிஞர் பாரதியைப் பற்றி ரேடியோவில் பேசினார், ஆங்கிலத்தில்! ரேடியோவிற்குள்ளே புராண முருகனும், பூம்பாவை வள்ளியும், மயிலும், காளையும், எமனும், எமனேறும் பரியும் ஆங்கில அடைமொழிகளைத் தாங்கி நுழைந்துவிட்டன. நல்ல முறையிலே தமிழ் தெரியாது போனாலும், அண்ணாவைத் தெரிந்து கொள்ள ஆவி துடித்துக் கிடந்த தோழர்களுக்கு அந்தச் சொற்பொழிவு மகிழ்ச்சி ஊட்டியது.

எங்கு பேசினாலும், எந்தத் தலைப்பை எவர் தந்தாலும், கொள்கை தான் அண்ணாவின் பேச்சுக்களிலே முக்கியத்வம் வகிக்கும். ஆற்றோரம் என்ற தலைப்பிலே பேச அண்ணாவைப் பணித்தனர்! அண்ணா யார் என்று தெரியும் அந்த மேடையை ஏற்படுத்திய குணாளர்களுக்கு! இருப்பினும் தந்தனர் இந்தத் தலைப்பை!

அண்ணா உலகின்கண் காணப்படும் பலநூறு ஆற்றங்கரைகளை எடுத்து அலசினார். பலம் பொருந்திய ரஷ்ய மக்கள் வால்கா நதிக்கரைகளிலே வாழ்கிறார்கள். இரும்புப் பிரதேசங்கள் எனக் கூறப்படும் ஜெர்மன் தொழிற்சாலை

நகரங்கள் ரைன் நதிக்கரையிலே இருக்கின்றன. அமெரிக்காவின் ஐஸ்வரியம், நாகரிகத்தின் ஜொலிப்பு மிஸ்ஸி ஸிப்பி-மிஸ்ஸௌரி நதிகளில் தேங்கிக் கிடக்கின்றன. தேம்ஸ் நதிக்கரையிலே விளங்குகிறது இலண்டன் மாநகரம்! அது உலகத்திலே முதன்மையான நகரம்! கைத்தொழில்களின் இருப்பிடம்! மூன்றரைக்கோடி ஆங்கிலேயர்களின் தலைநகரம்! இன்னும் உலகின் மற்றபாகங்களிலுள்ள நகரங்களின் சிறப்பு அந்த நாட்டு நதிகளில் விளைகிறது. நதிக்கரை நகரங்கள் வாணிபத்தை, செல்வத்தை வளர்க்கின்றன. இவ்வாறு எல்லா நாடுகளின் வளப்பையும் படம் பிடித்துக்காட்டிவிட்டு இறுதியில் இந்தியா வந்தார். கங்கைக் கரையும் காவேரிக் கரையும் கள்ளர்களுடைய வாசஸ்தலமாக இருந்திடக் கண்டார். இங்கே ஆற்றோரங்களில் அமர்ந்திருக்கின்றனர் ஆரியர்கள்! தர்ப்பை புல்லைக் கையில் ஏந்தியவண்ணம் கடவுள் தாசர்கள், பரலோகத் தபால் பெட்டிகள், கொக்கு போலக் குந்தியிருக்கும் கோலத்தை, அந்தக் கோரக் காட்சியை கண்டார். அதையும் கூறினார்.

"பொருள்" பற்றிப் பேசக் கிறிஸ்தவக் கல்லூரியிலே கூறினார்கள். பொருளாராய்ச்சி நிபுணர்களுக்கு அன்று ஒரு புதுப் பாடமே தந்துவிட்டார். கவிஞரின் படத்திறப்புக்காக அண்ணாமலை நகரிலே அண்ணா பேசும்போது, கவிதைகளின் கருப்பொருளோ, பருப்பொருளோ பற்றி அவர் பேசவில்லை. ஆனால் புரட்சிக்கவிஞரின் இதயத்தைப் படம் பிடித்தார். இதயவறையிலே எழுந்த எண்ணங்கள் நற்கவிதை





வுண்டு என்று புரிந்து கொண்டால்—யாருக்காக அறப்போர், யார் மீது என்ற தெளிவு அடைய வழி ஏற்படும். கொந்தளிக்கும் ஆரவார அலையோசை மத்தியிலே தளபதியின் வீர உரை இது!

"............இந்நிலை இந்தியாவில் இன்னும் நீடித்தால், இந்தியா செஞ்சீனாவாக மாறும். நேரு சியாங்காவார். அந்த மாண்·பார்மோஸவாகி விடும். இந்தக் கூட்டத்திலே குழுமியுள்ளோர் மத்தியிலே யாரேனும் ஒரு சாதாரணத் தோழர் ஒரு மாசேதுங்காகக் காட்சியளிப்பார். எண்ணற்ற மாசேதுங்குகள், சூடேக்கள் கிளம்புவர், நிலையிந்தால்! மக்கள் நினைத்தால் நானே கூட ஒரு மாசேதுங்காக மாறிவிடலாம்!"

புரட்சி செய்யும்படி மக்களைத் தூண்டுவது சுலபம். புரியாத மக்கள் போர்த்தீயில் குதித்தான பிறகு புலம்பலும் புகைச்சலும் கிளம்பினால் இலட்சிய சித்தியில் வெற்றி காண வழியில்லாமல் போய் விடலாம். எல்லாம் விழலுக்கிறைத்த நீராக, பாறையில் வடித்த பறையாகமாறிவிடும். ஆகவே மக்களை எப்படித் தயார் செய்வது என்ற பணியில் அண்ணா ஈடுபட்டுள்ளார்!

அட்லாஸ் என்றால் கெஜம் என்ன விலை என்று கேட்கும் மக்களுக்கு, பஞ்சாங்கத்தின் பரம்பரைப் பக்தர்களுக்கு நில நூல் வர்ணனைகளை மனக்கண் முன் துலங்கும்படி மேடை

யில் விவரித்துக் கூறி உணர்த்துகிறார். சொற்பொழிவுகள் தமிழ் மொழியில் மட்டுமல்ல, ஆங்கிலத்திலும் கூட ஆங்கில அறிஞர்கள் அதிசயித்துப் புகழுவண்ணம் அற்புதமாக நிகழ்த்தியிருக்கின்றார்.

நாகட்லாவிலே, இங்கு திராவிடப் பெரியார் ராமசாமி விளங்குவது போல ஆந்திரநாட்டுப் பெரியாராக, ராமசாமி சௌத்ரி என்பவர் இருந்து வந்தார். இரு ராமசாமிகளுக்கும் ஓரளவு தொடர்பு உண்டு. இருவரும் கடவுளின் விரோதிகள் எனக் கருதப்பட்டவர்கள்! பத்தாம் பசலிப் பார்ப்பனர் தம் பயங்கர விரோதிகள்! புழுத்த புராணங்களைப் பொசுக்க வந்த தீப்படுகைகள்! புல்லர்களைக் கருவறுக்கப் புதிர்போடும் போர் முரசங்கள்! புரட்சிப் புயல்கள்! நான்மறையாளர்கள் காணவும் நடுங்கும் ஏற்பாடுகள்! அத்தகைய ராமசாமி சௌத்ரி மரணமடைந்து விட்டார். அவர் ஞாபகார்த்தமாக நடந்த ஒரு விழாவிலே கலந்து கொள்ள பெரியாரும், அண்ணாவும் சென்றனர்.

தீச்சட்டியில் போட்டு வாட்டுவது போலிருந்தது வழிப் பயணம்! நாகட்லாவில் அண்ணா ஆங்கிலத்தில் பேச, தோழர் ஜனார்த்தனம் அதைத் தெலுங்கிலே மொழி பெயர்த்தார். நாகட்லாவுக்கும் நமக்கும் சுலபத்தில் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருந்தும் தவறிவிட்ட நிலைக்காக, ஆங்கிலத்தாள் இல்லாத குறைக்காக அண்ணா அப்போது பெருமூச்செறிந்தார். நாட்டின் மூலை முடுக்குகளிலே, கிரா





மிட வட்டாரங்களிலே, தெலுங்கர் வாழும் ஆந்திர தேசத்திலே பகுத்தறிவுக் கருத்துக்கள் பரவுவது கண்டு புன்னகை பூத்தார். அந்தப் 'புன்னகையும் பெருமூச்சும்' ஒன்று சேர்ந்து அன்று ஒரு உருக்கமான ஆங்கில சொற்பொழிவை நமக்குத் தந்திருக்கிறது. அடுத்து, "மக்களின் கவிஞன்" (**People's Poet**) என்ற தொடர்த் தலைப்பிலே கவிஞர் பாரதியைப் பற்றி ரேடியோவில் பேசினார், ஆங்கிலத்தில்! ரேடியோவிற்குள்ளே புராண முருகனும், பூம்பாவை வள்ளியும், மயிலும், காளையும், எமனும், எமனேறும் பரியும் ஆங்கில அடைமொழிகளைத் தாங்கி நுழைந்துவிட்டன. நல்ல முறையிலே தமிழ் தெரியாது போனாலும், அண்ணாவைத் தெரிந்துகொள்ள ஆவி துடித்துக் கிடந்த தோழர்களுக்கு அந்தச் சொற்பொழிவு மகிழ்ச்சி ஊட்டியது.

எங்கு பேசினாலும், எந்தத் தலைப்பை எவர் தந்தாலும், கொள்கை தான் அண்ணாவின் பேச்சுக்களிலே முக்கியத்வம் வகிக்கும். ஆற்றோரம் என்ற தலைப்பிலே பேச அண்ணாவைப் பணித்தனர்! அண்ணா யார் என்று தெரியும் அந்த மேடையை ஏற்படுத்திய குணாளர்களுக்கு! இருப்பினும் தந்தனர் இந்தத் தலைப்பை!

அண்ணா உலகின்கண் காணப்படும் பல நூறு ஆற்றங்கரைகளை எடுத்து அலசினார். பலம் பொருந்திய ரஷ்ய மக்கள் வால்கா நதிக்கரைகளிலே வாழ்கிறார்கள். இரும்புப் பிரதேசங்கள் எனக் கூறப்படும் ஜெர்மன் தொழிற்சாலை

நகரங்கள் ரைன் நதிக்கரையிலே இருக்கின்றன. அமெரிக்காவின் ஐஸ்வரியம், நாகரிகத்தின் ஜொலிப்பு மிஸ்ஸிஸிப்பி-மிஸ்ஸௌரி நதிகளில் தேங்கிக் கிடக்கின்றன. தேம்ஸ் நதிக்கரையிலே விளங்குகிறது இலண்டன் மாநகரம்! அது உலகத்திலே முதன்மையான நகரம்! கைத்தொழில்களின் இருப்பிடம்! மூன்றரைக்கோடி ஆங்கிலேயர்களின் தலைநகரம்! இன்னும் உலகின் மற்றபாகங்களிலுள்ள நகரங்களின் சிறப்பு அந்த நாட்டு நதிகளில் விளைகிறது. நதிக்கரை நகரங்கள் வாணிபத்தை, செல்வத்தை வளர்க்கின்றன. இவ்வாறு எல்லா நாடுகளின் வனப்பையும் படம் பிடித்துக்காட்டிவிட்டு இறுதியில் இந்தியா வந்தார். கங்கைக் கரையும் காவேரிக் கரையும் கள்ளர்களுடைய வாசஸ்தலமாக இருந்திடக் கண்டார். இங்கே ஆற்றோரங்களில் அமர்ந்திருக்கின்றனர் ஆரியர்கள், தர்ப்பை புல்லைக் கையில் ஏந்தியவண்ணம் கடவுள் தாசர்கள், பரலோகத் தபால் பெட்டிகள், கொக்கு போலக் குந்தியிருக்கும் கோலத்தை, அந்தக் கோரக் காட்சியை கண்டார். அதையும் கூறினார்.

"பொருள்" பற்றிப் பேசக் கிறிஸ்தவக் கல்லூரியிலே கூறினார்கள். பொருளாராய்ச்சி நிபுணர்களுக்கு அன்று ஒரு புதுப் பாடமே' தந்துவிட்டார். கவிஞரின் படத்திறப்புக்காக அண்ணாமலை நகரிலே அண்ணா பேசும்போது, கவிதைகளின் கருப்பொருளோ, உருப்பொருளோ பற்றி அவர் பேசவில்லை. ஆனால் புரட்சிக்கவிஞரின் இதயத்தைப் படம் பிடித்தார். இதயஊற்றிலே எழுந்த எண்ணங்கள் நற்கவிதை





வாயிலாக வெளிவந்துள்ளன. அவைகளின் விளைவுகளை எண்ணிப்பார்க்க மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். தாழ்ந்த தமிழகத்தின் தள்ளாத நிலையை, கப்பலோட்டிய தமிழன் சந்ததியினரைக் கடல் நீரோடு கலக்கி நின்ற காட்சியைப் பாய்சினர். வளமுள்ள வயல்களும், வற்றாத நதிகள் பாய்ந்தும் வாழ்க்கை வறண்ட பாலை நிலமாக வாய்த்திருப்பதை விளக்கினார்.

1945-ம் ஆண்டு! காங்கிரஸின் அரசாக விளங்கியது அமெரிக்கன் கல்லூரி! அல்லாடிகளும் ஆச்சாரிகளும் மட்டுமே அரங்க மேடைக்கு வந்து வந்து போய்க்கொண்டிருந்த நேரம்! அப்போது அண்ணா அழைக்கப்பட்டார். ஆயிரந் தடைகள் குவிந்த போதிலும் அமைச்சராக இருந்த தோழர் அரும்பாடுபட்டதின் பயனாக தமிழ்க்கழக ஆண்டு விழாவில் பேச அண்ணா சென்றார். தலைப்பு, **நாடும் ஏடும்** என்பது! மேடையிலே அமர்ந்ததும் அங்குள்ளோர் தம் நிலையை அண்ணா [illegible] புரிந்து கொண்டார். தேசியத் தோரணங்கள் தொங்கும் மாளிகை மத்தியிலே ஜெய்ஹிந்த்—வந்தேமாதர ஜிந்தாபாத்துக்கள் வாழ்த்துப் பாட, எதிர்ப்பு ஒலிகள் எத்திக்குகளிலுமிருந்து ஒலித்திட, அண்ணா எழுந்து பேச! நாடு என்ற பகுதியில் [illegible] நாட்டையும், ஏடு என்பதற்கு கம்பராமாயணத்தையும் இணைத்து அண்ணா பேசுவார் அதைச் சாக்கிட்டு சிறு சச்சரவு ஒன்று எழுப்ப ஒரு சில மாணவர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவர்கள் ஏமாறும்படியாக, நிகழ்கால நடை[illegible]ற நாட்டையும்,

இலக்கிய ஏடுகளிலே காணப்படும் நாட்டு வர்ணனைகளையும் ஒப்பிட்டுக் காட்டினார். அந்த அழகு நயத்தைக்கண்டு அறை கூவல் விடுத்த அன்பர்கள் ஆச்சரியக் குறிகளாக மாறி விட்டார்கள். பேரிடியென பெருஞ் சத்தம் கிளப்பியவர்கள் பெட்டிப் பாம்பாய்க் கிடந்தனர்!

கம்ப ராமாயணத்தைத் தீயிலிட வேண்டுமென்று கூறிய போது சேதுப்பிள்ளைகள் சீறினார்கள்! சோமசுந்தரபாரதிகள் சோகித்தனர்! வாரிகள் அலறினார்கள்! அண்ணாவின் பேனாவுக்கு பதிலிறுக்க வகையறியாத பேராசிரியர்கள், பேச்சினால் மடக்கிவிடலாம் என்று கருதி பொதுமேடையிலே போருக்கு அழைத்தனர்! பலரறிய, நடு நிலையாளர்கள் தலைமையிலே அண்ணா அவர்களோடு வாதிட்டார்! அண்ணா புயலானார்! அவர்கள் துரும்பாயினர்! அண்ணாவின் பேச்சு அலைகடலெனப் பொங்கியது! அவர்கள் வார்த்தை அலைகடலிலே சிறு கலமெனத் தத்தளித்தது! அண்ணாவின் பேச்சு பெருந்தீயாக பரவியது! அவர்கள் வார்த்தை வெறுஞ் சருகாகியது! அண்ணாவின் பேச்சு மக்களின் உள்ளத்திலே பதிந்தது! அவர்கள் பேச்சு காற்றிலே பறந்தது! மூன்று மணி நேரச் சண்டமாருதத்தால் சேதுப்பிள்ளைகளின் மூச்சு திணறியது! ரயிலுக்கு நேரமாகி விட்டதென்றும் தலை வலிக்கிறதென்றும் கூற முடிந்ததே தவிர கம்பனை ஏன் கொளுத்தக்கூடாது என்று அவர்களால் காரணம் காட்ட முடியவில்லை! அண்ணா அவர்களின் முன்னிலையிலேயே கம்பனைக் கொளுத்தினார் **தீ பரவட்டும்** என்று மக்கள் **நல்ல தீர்ப்பு** கூறினா.





மற்ற பேச்சாளர்களுக்கும் இவருக்கும் உள்ள ஒரே வித்தியாசம் என்னவென்றால், அண்ணாவின் பேச்சுக்களிலே ஆராய்ச்சியுரைகள் மிகுந்திருக்கும். ஆதாரங்கள் மலிந்திருக்கும். நம்முடைய சிந்தனைக்கு அதிக வேலை கொடுப்பார். இனிப்புப் பூசிய கசப்பு மருந்தை இதமாக ஊட்டுவார். மருந்து சாப்பிடும்போது விருந்து அருந்துவது போல இருக்கும். உள்ளே சென்ற பிறகு தான் பேச்சு வேலை செய்ய ஆரம்பிக்கும். அப்போது தான் அண்ணாவின் பெருமையை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

பேச்சுத் திறமையால் எதிரிகளையும் தம் வயப்படுத்தும் ஆற்றல் பொருந்திய அண்ணா நம் அந்தோனியா! ஸீசரின் மரணப் படுக்கையில் அந்தோனியா அழுது கொண்டிருக்கவில்லை. மக்களின் சீற்றத்தைப் புரூடஸ் கும்பலின் மீது திருப்பிவிட்டான்! இன்று நம் அந்தோனியா செத்துக் கொண்டிருக்கும் திராவிடத்தின் மடிமீது நின்றுகொண்டு, அறைகூவி அழைக்கிறார்! கல்லெறிந்த கரங்கள் இன்று கட்டியணைக்க வருகின்றன! வசை பாடிய வாய்கள் இன்று வாழ்த்துப் பாசுரம் பாடுகின்றன! நாட்டிலே புதியதோர் **"மறு மலர்ச்சி" "திராவிடர் நிலை"**யில் காண வித்திட்டார் அண்ணா! அதன் விளைவை இன்று காண்கிறோம்!

# 4. 6-6-1948!

"ஆஸ்ரமத்திலிருந்து அரண்மனைக்குக் குடியேறும் அளவுக்கு அரசியலில் அந்தஸ்துப் பெற்றவரான அன்பர் ஆச்சாரியார் சின்னாட்களுக்கு முன்பு வங்கத்திலோரிடத்தில், வசிஷ்டர் வியாசர் போன்றாரின் வழிவழி தோன்றியவர் இவர் என்றுபிறர் எண்ணும் நிலையை உண்டாக்கும் உபதேசம் ஒன்று செய்துள்ளார்!........இப்போது மாகாணம் என்ற பிரிவு இருக்கிறதே தவிர, சகல காரியமும் டில்லியிலே தான் நடைபெற்று வருகிறது! அரிசி இல்லையா? டில்லிக்குத் தந்தி! துணி வேண்டுமா? டில்லிக்குத் தந்தி! இரும்பு வேண்டுமா? டில்லிக்குத் தந்தி! என்று இப்படித்தான் காரியம் நடக்கிறது. இந்நிலையை உணரவேண்டும் என்று பொருள்படப் பேசினார் ஆச்சாரியார் வங்கத்தில்...................". ஆச்சாரியார்—நிதி மந்திரியாயிருந்த சண்முகனாரின் கருத்துப்படி—ஓர் குல்லூக பட்டர்! அவர் "மாகாணங்கள், தனி உரிமை கோரவே கூடாது, என்று கூறவில்லை. மாகாணங்கள் தமது உரிமைக்கான விஷயத்தை **இப்போது** கவனிக்க வேண்டாம் என்றும் பேசியிருக்கிறார்"

இது **6—6—48** ல் திராவிட நாடு இதழில் வெளிவந்த தலை பக்கத்தின் ஒரு துணுக்கு! ஆச்சாரியார், அன்று வைசிரா





யாகப் பதவி ஏற்கப் போவதற்கு முன்பு வங்க மக்களுக்குக் கூறிய அறவுரை, சமாதானக் கண்துடைப்புப் பிரச்சாரம் இன்று நமது சென்னை ராஜ்யத்திற்கு முற்றிலும் பொருந்துவதாயிருக்கிறது. வங்கத்தின் மாஜி நிலைமையையும் சென்னையின் தற்கால அரசியல் சூழ்நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிச்சயம் ஒரு உண்மை தெளிவாக எவருக்கும் விளங்கும். இப்போது வங்கம் சென்னைக்குச் சரியாகப் பொருந்துகிறது! எந்தப் பகுதியினர் அரசியல் கிளர்ச்சியில் அதிகமாக ஈடுபடுகின்றனரோ, மத்திய இணைப்புக்கு ஒரு சில காரியங்களில் மாறாக மீறிச் செல்லுகின்றனரோ அங்கே வங்கம் நிகழ்ந்து வருகிறது, தவறாமல். வங்காளத்தில் தான் பத்திரிகைகளும் மறைக்க முடியாத பஞ்சம் வந்தது! அங்கு தான் ஆச்சாரியாரும் அறவுரை கூறியிருக்கிறார்!

சென்னையில் நிதி மந்திரியார் கோபாலனார் பிடிவாதமாக இருக்கிறார்; மாதவனார் தேசிய மொழியினை இஷ்டப்பாடமாக்கி யிருக்கிறார், இங்கு சென்னையில்! உணவு மந்திரி விக்டோரியா பதறுகிறார்! பிரதமர் ராஜா! அவர் டில்லிக்கும் சென்னைக்கும் பறந்து கொண்டிருக்கவே நேரம்சரியாகி விடுகிறது. எனவே அரசியல் கொந்தளிப்பில் சென்னை இன்று [illegible]யிருக்கிறது. தேசீய பாஷை இந்தியைப் புகுத்தும் திட்டம் இங்கே தேய்ந்து போய்விட்டது கம்யூனல் ஜி. ஓ. சுப்ரீம் கோர்ட்டுக்கு எட்டியிருக்கிறது! முடிவு........? உணவுப் பிரச்னையிலே சென்னைவாசிகள் ஒடுக்கப்படுகிறார்கள்.

எம்.எல். ஏக்கள் சட்டசபைகளிலே கண்ணீர் வடித்துக்கதறுகிறார்கள். கத்தாழைக்கிழங்கு, புளியங்கொட்டை இவைகள் நாட்டுப்புற மக்களில் பெரும்பாலோரின் முக்கிய உணவுப் பொருள்களாகி விட்டன! பட்டினிச் சாவும் பிள்ளை வியாபாரமும் பெருத்துவிட்டன! இரத்தக் கண்ணீர் வடித்து நெஞ்சு வெடித்து உள்ளந் துடித்து வருந்த வேண்டிய சூழ்நிலை சென்னை ராஜ்யத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது! மற்றொரு வங்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது!

இப்போது மாகாணப் பிரிவினை தனி அரசு கோரிக்கை எதுவும் வேண்டாம் என்று வங்கத்தினரை அன்று வாயுரைகளால் மயக்கிய ஆச்சாரியார் கூட இப்போது எதுவும் பேசக் காணோம்.

வங்கம் வதையும் போது, 6-6-48ல் அண்ணா கூறினார், ஆணித்தரமாக! "இப்போது வேண்டாம் என்பதுதானா இப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்குப் பதில்! ஆச்சாரியார் கூறுகிறபடி சகலரும் டில்லியை நோக்கித் தவங்கிடக்கிறார்கள்—சகல அதிகாரமும் அங்கு குவிந்து கிடக்கிறது. தனி அரசு செலுத்திய திராவிடர்கள் அரிசி சாப்பிடுவதா, சோளம் தின்பதா என்பதுபற்றி சென்னை மந்திரி கூட அல்ல, டில்லியிலுள்ள மந்திரி கூறுகிறார்! இந்த நிலையைக் கண்டு, இங்கு பூமிக்கடியில் தூங்கும் இயற்கை செல்வத்தை எண்ணி, இங்குள்ள மார்க்கெட்டுகளில் வடநாட்டுப் பொருள் மறைந்து கிடப்பதைக்கண்டு, நாட்டின் ஜீவநாடி வடநாட்டாரிடம் இருப்பதைப் பார்த்து, இந்நாட்டுப் பெரு





மக்கள் வெளி நாட்டிலே கூலிகளாக வதைவதா என்று எண்ணி, ஏக்கத்துடன், திராவிடர் திராவிடநாடு கேட்கின்றனர்............ஆச்சாரியாரைக் கேட்கிறோம்—அறிவுள்ளவரைக் கேட்கிறோம்—அநீதிக்கு இடந்தரலாகாது என்று கருதும் ஆண்மையாளர்களை எல்லாம் கேட்கிறோம், இப்போது கேட்கக் கூடாதா, திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்று!"

6–6–48ல் அண்ணா ஆச்சாரியாரிடம் கேட்டார், திராவிட நாடு இதழின் மூலம்! இப்போது வங்காள நிலையை சென்னையில் காண்கிறோம். அண்ணா அப்போது குறிப்பிட்ட "இப்போது" வந்துவிட்டது! 6–6–48ல் வங்காளம் இன்று சென்னையில்! எனவே இப்போது அரசியலாரைக் கேட்கக் கூடாதா, திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்று, என்று தான் நாம் அண்ணாவைக் கேட்கிறோம். ஆச்சாரியாரின் இப்போதைய மௌனம் நமது பிரிவினைக் கிளர்ச்சியை எதிர்ப்பதாகத் தெரியவில்லை! எனவே 6–6–48ஐ மீண்டும் நினைவுறுத்துகிறோம்!

அறிஞர் அண்ணா, கலைத் துறையில் செய்து காட்ட வேண்டிய பணியினை எதிரிகளும் பிரமிக்கும் வண்ணம் செய்து முடித்து விட்டார். திரையிலும், நாடக மேடையிலும் இன்று சீர்திருத்தக் கருத்துக்கள் ததும்புகின்றன. தம்பிகளுக்கு வசனமமைத்துக் கொடுக்கும்படி எங்கும் 'இன்று வரவேற்பு! புராணப் படங்களைப் பஜனை மடங்களும் பார்க்க மனம் கூசுகிறார்கள். செந்தமிழும் அடுக்குத் தொடர் அழகும் சினிமா வசனங்களில் இன்று அரசோச்சுகின்றன.

ஆகவே கலைத் துறையில் சீர்திருத்தத்தைப் பாய்ச்சிய அண்ணாவை, இப்போது நம் இறுதி லட்சியமான திராவிட நாட்டைத் திராவிடருக்காக்கும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டுத் தளபதியின் உருவில், தளபதிகளின் அணிவகுப்பில் காண, கண்டு உள்ளம் மகிழவிரும்புகிறோம்.

கம்யூனல் ஜி. ஓ. வும், உணவுப் பிரச்னையும் இந்திய யூனியனில் நிச்சயம் ஒரு பீதியைக் கிளப்பிவிட்டிருக்கும். தென்னாட்டவர் எப்பேர்ப்பட்டவர் என்பதைப் பூரணமாக யூனியன் மெம்பர்களுக்கு விளக்க குல்லூக பட்டரும் இப்போது அங்கே இருக்கிறார்! இன்றையத் திராவிடர்களும் இனியொரு முறை புலியாக மாறி போர்க்களக் காதையைப் பாடிடப் போவோருமல்லர்! பரம்பரை வீரர்கள் வழி வந்த தீரர்கள்! குன்றெடுக்கும் நெடுந்தோளும், எதிரிகளின் குலை குலுக்கும் கொடுங்கரமும் படைத்த குணாளர்கள்! வையகம் நிலை குலைந்தாலும், வானின் நிலை குலைந்தாலும் மனோ நிலை குலையா மறத்தமிழர்! வயின்வயின் உடன்று மேல் வருகின்ற வம்ப மள்ளரை நிலஞ்சேர அடும் நெடுஞ்சேரலாதனின் உயிராடும் நிழல்கள்! அவர்கள்—இந்நாட்டுமக்கள், நாம் மறுபடியும் அண்ணாவைத் தளபதியின் உருவிலே காண விழைகிறோம்!

இனி நிகழவிருக்கும் திராவிட நாடு பிரிவினைப் போராட்டத்தில் "**ராஜ பார்ட்**" பாகத்தைத் தாங்க அண்ணாவே எவ்வகையிலும் பொருத்தமானவர். விடுதலைக் கிளர்ச்சிக்கான எழுச்சிப் போரின் வேந்தனாக அண்ணா வெளிக்கிளம்பும் நன்னாளை எந்தச் சமயமும் எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லதருணம் இப்போது! இன்னமும் அண்ணாக்கள் யார் என்று அலட்சியத்திலே மிதந்து கொண்டிருக்கும் அரசியல் குருடர்கள் கூட அண்ணா யார் என்று நன்றாக உணர்ந்து கொள்ள முடியும் அப்போது!

முத்து பிரிண்டர்ஸ், 7 ஜடாமுனி கோவில் தெரு, மதுரை-10.

820

2-8-5-91

[illegible]

எமது அடுத்த வெளியீடு.

MADRAS

வெறும் காகிதக் குப்பைகளல்ல!
கருத்துக் குப்பைகள்
மண்டிக் கிடக்கும்

# குப்பைத் தொட்டி

[illegible]

—: விபரங்களுக்கு: :—

செல்வம் பதிப்பகம்
மதுரை.

Published by S. Krishnasamy for Selvam Publicity
Printed at MUTHU PRINTERS
7, [illegible]darmuni Koil St., MATHURAI.